# பெரியாழ்வார் திருமொழி 4-6

## காசுங்கறையுடை

(பெற்ற பிள்ளைகளுக்குப் பரம புருஷனுடைய திருநாமங்களை இட்டழைக்கும்படி மனம் திருந்தாதார்க்கு உபதேசித்தல்)

381 * காசும் கறையுடைக் கூறைக்கும் * அங்கோர் கற்றைக்கும்
ஆசையினால் * அங்கவத்தப் பேரிடும் ஆதர்காள் **
கேசவன் பேரிட்டு * நீங்கள் தேனித்திருமினோ *
நாயகன் நாரணன் * தம் அன்னை நரகம்புகாள் (1)

382 அங்கொரு கூறை * அரைக் குடுப்பதன் ஆசையால் *
மங்கிய மானிட சாதியின் * பேரிடும் ஆதர்காள் **
செங்கணெடுமால் * சிரீதரா என்று அழைத்தக்கால் *
நங்கைகாள் நாரணன் * தம் அன்னை நரகம்புகாள் (2)

383 உச்சியில் எண்ணெயும் * சுட்டியும் வளையும் உகந்து *
எச்சம் பொலிந்தீர்காள் * என் செய்வான் பிறர் பேரிட்டீர் **
பிச்சை புக்காகிலும் * எம்பிரான் திருநாமமே
நச்சுமின் * நாரணன் * தம் அன்னை நரகம்புகாள் (3)

384 மானிட சாதியில் தோன்றிற்று ஓர் * மானிட சாதியை *
மானிட சாதியின் பேரிட்டால் * மறுமைக்கில்லை **
வானுடை மாதவா * கோவிந்தா என்று அழைத்தக்கால் *
நானுடை நாரணன் * தம் அன்னை நரகம்புகாள் (4)

385 மலமுடை ஊத்தையில் தோன்றிற்று ஓர் * மல ஊத்தையை *
மலமுடை ஊத்தையின் பேரிட்டால் * மறுமைக்கில்லை **
குலமுடைக் கோவிந்தா * கோவிந்தா என்று அழைத்தக்கால் *
நலமுடை நாரணன் * தம் அன்னை நரகம்புகாள் (5)

386 நாடும் நகரும் அறிய * மானிடப் பேரிட்டு *
கூடியழுங்கிக் * குழியில் வீழ்ந்து வழுக்காதே **
சாடிறப் பாய்ந்த தலைவா * தாமோதரா என்று
நாடுமின் * நாரணன் * தம் அன்னை நரகம்புகாள் (6)

387 மண்ணில் பிறந்து மண்ணாகும் * மானிடப் பேரிட்டு * அங்கு
எண்ணமொன்றின்றி இருக்கும் * ஏழை மனிசர்காள் **
கண்ணுக்கினிய * கருமுகில் வண்ணன் நாமமே
நண்ணுமின் * நாரணன் * தம் அன்னை நரகம்புகாள் (7)

388 நம்பி பிம்பி என்று * நாட்டு மானிடப் பேரிட்டால் *
நம்பும் பிம்பும் எல்லாம் * நாலு நாளில் அழுங்கிப் போம் **
செம்பெருந்தாமரைக் கண்ணன் * பேரிட்டழைத்தக்கால் *
நம்பிகாள் நாரணன் * தம் அன்னை நரகம்புகாள் (8)

389 ஊத்தைக் குழியில் * அமுதம் பாய்வது போல் * உங்கள்
மூத்திரப் பிள்ளையை * என் முகில்வண்ணன் பேரிட்டு **
கோத்துக் குழைத்துக் * குணாலமாடித் திரிமினோ *
நாத்தகு நாரணன் * தம் அன்னை நரகம்புகாள் (9)

390 * சீரணிமால் * திருநாமமே இடத்தேற்றிய *
வீரணி தொல்புகழ் * விட்டுசித்தன் விரித்த **
ஓரணி ஒண்தமிழ் * ஒன்பதோடொன்றும் வல்லவர் *
பேரணி வைகுந்தத்து * என்றும் பேணியிருப்பரே (10)